ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1979/20 - 2016 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2016.08.09
*1979/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், இக்கட்டளை மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல் இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், அக்கட்டளை மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்படுவதுமான ( 2016, சனவரி 08 ஆந் திகதிய 1948/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான) கட்டளைக்கான அட்டவணையை பின்வருமாறு திருத்துகின்றேன் :-

(01) அட்டவணையின் I நிரலில் காணப்படும் “கலைப்பீடம்” என்னும் பதிவிற்கு நேரொத்ததான II ஆம் நிரலில் காணப்படும் “9. சமூகவியல் துறை” என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் விடயத்தினை சேர்ப்பதன் மூலமும் :-

“10 பௌத்த கற்கைகள் துறை”

(02) அட்டவணையின் I நிரலில் காணப்படும் “மருத்துவப்பீடம்” என்னும் பதிவிற்கு நேரொத்ததான II ஆம் நிரலில் காணப்படும் “14. சத்திர சிகிச்சை மற்றும் உணர்வழியியல் துறை” என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலமும் :-

“15 மருத்துவ மானிடவியல்கள் துறை
16 மருத்துவ கல்வித்துறை
17 இணைந்த சுகாதார அறிவியல்கள் துறை”.

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, ஓகத்து 03.

8- 652


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.